# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1646/19 - 2010 මාර්තු 24 වැනි බදාදා - 2010.03.24

*1646/19 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80.*

### *1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சர்.

சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு,
கொழும்பு,
2010, மாச்சு 16.

ஒழுங்குவிதிகள்

உணவு (மீன்களில் போமல்டிஹைட்) ஒழுங்குவிதிகள் - 2010

1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் உணவு (மீன்களில் போமல்டிஹைட் ) ஒழுங்குவிதிகள் 2010 என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2010 ஆம் ஆண்டின் யூலை 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இலங்கையில் ஆளெவரும் 5 மில்லி கிராம்/கிலோ கிராம் ஐ (பிபிஎம்) விஞ்சுகின்ற மட்டங்களில் போமல்டிஹைட்டினை கொண்டுள்ள, ஏதேனும் மீனை இறக்குமதி செய்தல், ஏற்றிச் செல்லுதல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்டி வைத்தல் ஆகாது.

3. நாட்டினுள் மீனை இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் அம்மீன், இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படும் மட்டங்களுக்கு ஒத்திசைவானவையென குறிப்பிடுகின்றதான, விடயத்திற்கேற்ப மூல நாட்டின் அல்லது ஏற்றுமதி செய்கின்ற நாட்டின் இயைபான தேசிய அதிகாரசபையிடமிருந்து ஒத்திசைவுச் சான்றிதழ் ஒன்றை நாட்டினுள் அத்தகைய மீனின் இறக்குமதி செய்யப்பட்ட நுழைவிடத்தில் காண்பித்தல் வேண்டும்.

*04- 254*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.